| 09 |
|---|

# கணக்கீடு

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்
## தரம் 12
## நிறைவில் பதிவுகள்

1. பின்வருவனவற்றுள் எது விளையாட்டு கழகமொன்றின் நிதி நிலமைக் கூற்றில் உள்ளடக்கக் கூடிய விடயம்?
   - A - அங்கத்துவ சந்தா கணக்கு
   - B - திரண்ட நிதி
   - C - திரண்ட நன்கொடை கணக்கு
   - D - வருமானச் செலவு கணக்கு
   - E - காசு பாய்ச்சல் கூற்று

   1) A மற்றும் B
   2) A மற்றும் C
   3) A,B மற்றும் C
   4) B,C மற்றும் D
   5) A,C மற்றும் D

2. இலாப நோக்கற்ற நிறுவனமொன்றின் பின்வரும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய கணக்கு யாது?

| | தகவல் | கணக்கு |
|---|---|---|
| A - | வருடத்தில் இனங்காணப்பட்ட அங்கத்துவ பணம் | ………………………………. |
| B - | வருடத்தில் காசு உட்பாய்ச்சலும் வெளிபாய்ச்சலும் | ……………………………….. |

3. 2021.03.31 முடிவடைந்த வருடத்துக்கான விளையாட்டுக் கழகமொன்றின் அங்கத்துவ சந்தா தொடர்பான தகவல்கள் வருமாறு,
   2020 / 2021 வருடத்தினுள் அங்கத்துவ சந்தா தொகை,

| வருடம் | ரூ |
|---|---|
| 2019 / 2020 | 12000 |
| 2020 / 2021 | 75000 |
| 2021 / 2022 | 8000 |
| | 95000 |

| | 2021.03.31 | 2020.03.31 |
|---|---|---|
| அட்டுறு அங்கத்தவ பணம் | 18000 | 20000 |
| முட்பண அங்கத்துவ பணம் | ? | 12000 |

2021.03.31 முடிவடைந்த வருடத்துக்கான அங்கத்துவ பணம்

BUSINESS & COMMERCE BRANCH

4. இலாப நோக்கற்ற நிறுவனம் தொடர்பான பின்வரும் தகவல்கள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.

A. வருட கடைசியில் திரண்ட நிதியின் அதிகரிப்பானது நிறுவனத்தின் மிகை நிலமையை எப்போதும் காண்பிக்கும்.

B. வருட அங்கத்துவம் சந்தா வருமானம், வருமானச் செலவுக் கணக்கினூடாக தெரிந்து கொள்ளலாம்.

C. விளையாட்டு கழகம் விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வது வருடக் கடைசியில் மொத்த சொத்து அதிகரிப்புக்கு காரணமாகும்.

D. இலாப நோக்கற்ற நிறுவனம் தனது நன்கொடைகளை அதிகரிப்பதற்காக கலியாட்டங்களை நடாத்துவது, விளையாட்டு போட்டிகளை ஏற்பாடு செய்கிறது.

5. பின்வரும் தகவல்கள் நலன்புரி சங்கமொன்றுடன் தொடர்புடையது,

| விபரம் | 2021.03.31 (ரூ.000) | 2020.03.31 (ரூ.000) |
|---|---|---|
| காரியாளய உபகரணம் (தேறியது) | 1000 | 850 |
| அட்டுறு அங்கத்தவ சந்தா | 20 | 25 |
| வங்கி | 60 | 60 |
| வங்கிக்கடன் | 300 | 500 |
| முட்பண அங்கத்துவ சந்தா | 15 | 10 |

தேறிய சொத்து தொடர்பில் 2020.03.31 முடிவடைந்த வருடத்துக்கான மிகை அல்லது குறை எவ்வளவு?

1) ரூ.340000
2) ரூ.425000
3) ரூ.(145000)
4) ரூ.(340000)
5) ரூ.(425000)

6. பின்வரும் தகவல்கள் (சூரியா) விளையாட்டுக் கழகத்துடன் தொடர்பானது,

| | 2022.03.31 ரூ.(000) | 2021.03.31 ரூ.(000) |
|---|---|---|
| திரண்ட நிதி | 730 | 680 |
| ஆயள் அங்கத்துவ சந்தா | 225 | 250 |

ஆயுள் அங்கத்துவ சந்தாவில் 10% வருட வருமானமாக கணிப்பிடுவது கழகத்தின் கொள்கையாகும்.
2022.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்தக்கான (சூரியா) விளையாட்டு கழகத்தின் மிகை அல்லது குறை எவ்வளவு?

1) ரூ.25000 குறை
2) ரூ.50000 மிகை
3) ரூ.50000 குறை
4) ரூ.75000 மிகை
5) ரூ.75000 குறை

7. ஸ்டார் கழகத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு,

BUSINESS & COMMERCE BRANCH

| விபரம் | 2022.03.31 திகதியில் ரூ.(000) | 2021.03.31 திகதியில் ரூ.(000) |
|---|---|---|
| காரியாளய உபகரணம் | 500 | 400 |
| அட்டுறு அங்கத்துவ சந்தா | 50 | 60 |
| கையிலுள்ள காசு | 150 | 190 |
| நீண்ட கால கடன் | 200 | 300 |
| முற்பன அங்கத்துவ சந்தா | 35 | 20 |

2022.03.31 திகதியில் முடிவடைந்த வருடம் தொடர்பாக மிகை அல்லது குறை யாது? (தேறிய சொத்தை பயன்படுத்தவும்)

1) குறை ரூ.45000
2) குறை ரூ.135000
3) மிகை ரூ.135000
4) மிகை ரூ.150000
5) மிகை ரூ.465000

8. விளையாட்டுக் கழகமொன்றின் 2022.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்தில் இருந்த அங்கவத்தரின் வருட சந்தா பணம் ரூ.5000 ஆகும். 2022.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்தில் கழகத்துக்கு கிடைத்த காசு பின்வருமாறு,
   - நிதியாண்டுக்கான அங்கத்துவ சந்தா ரூ.500000
   - நன்கொடை ரூ.350000
   - 2021.03.31 திகதி முடிவடைந்த நிலையான வைப்பில் கிடைத்த காசு ரூ.875000 (அதில் 75000 வட்டி வருமானத்துடன் 2021.03.31 திகதிக்கு அட்டுறு வட்டி வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது)

     நன்கொடைகள் கிடைத்த வருடத்திலிருந்து சமனான 5 வருடங்களுக்கு வருமானமாக இனங்காண்பது கம்பனியின் கொள்கையாகும்.

   மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கயால் 2022.03.31ல் முடிவடைந்த வருடத்துக்கான இனங்காணப்பட்ட வருமானம் மற்றும் 2022.03.31 திகதிக்கான சொத்துக்களின் அதிகரிப்பு யாது?

9. 2022.03.31 திகதிக்கான தாமரை விளையாட்டு கழகத்தின் அங்கத்துவ எண்ணிக்கை 60. அங்கத்தவர்களின் அங்கத்துவ சந்தா ரூ.1200. 2022.03.31 திகதி வருடத்துக்கான அங்கத்தவ பணமாக ரூ.48000 கடனாக பெறப்பட்டது. 2022.03.31 மற்றும் 2021.03.31 திகதிக்கு முற்பணமாக பெறப்பட்ட அங்கத்துவம் சந்தா முறையே ரூ.6000 மற்றும் ரூ.9000 ஆகும்.

   பின்வருவனவற்றை கணிப்பிடுக.

   A. 2022.03.31 முடிவடைந்த வருடத்துக்கான அங்கத்துவ சந்தா வருமானம்?
   B. 2022.03.31 திகதிக்கு அட்டுறு அங்கத்துவ சந்தா?

BUSINESS & COMMERCE BRANCH